# த.வெ.க. அரசு பயிர்க்கடன் தள்ளுபடி அறிவிப்பு!

# விவசாயிகள் கடும் அதிருப்தி - ஏமாற்றம்!

### பயிர்க்கடன் தள்ளுபடி:

## விவசாயிகளை சந்திக்க மறுத்த முதல்வர்!

### தலைமைச் செயலகத்தில் அனுமதிக்கவில்லை!

சென்னை, மே 28 - முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி கோரிக்கையை வலியுறுத்தி முதலமைச்சரை சந்திக்க முயன்ற விவசாயிகளை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டதால் பரபரப்பு நிலவியது.

தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல், மிக குறைந்த அளவிலேயே விவசாய கடனை த.வெ.க., அரசு தள்ளுபடி செய்துள்ளது. இதற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடி கோரிக்கையை வலியுறுத்தி சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரை சந்திப்பதற்காக தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் வந்தனர். அப்போது அவர்களை தடுத்து நிறுத்திய காவல் துறையினர், காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டனர். இதனால் விவசாயி கள் மிகுந்த வேதனையடைந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், கடந்த ஆட்சியாளர்களை பின்பற்றியும், தேர்தல் வாக்குறுதியின்படியும் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். இல்லையென்றால் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் எச்சரித்தனர்.

## விவசாய சங்கங்கள் ஏமாற்றம்!

**சென்னை, மே 28 – கூட்டுறவு வங்கிகளில் ரூ.50,000 வரையிலான பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பு, பெரும்பாலான விவசாயிகளிடையே அதிருப்தியையும் குமுறலையும் ஏற்படுத்தி-யுள்ளது.**

முழுமையான கடன் தள்ளுபடி எதிர்பார்த்த விவசாயிகளுக்கு, நிபந்தனைகள் மற்றும் உச்சவரம்பு காரணமாக இந்த அறிவிப்பு ஏமாற்றமாக அமைந்துள்ளது. 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே முழுமையான தள்ளுபடி வழங்கப்படும் என்ற நிபந்தனை, அனைத்து விவசாயிகளுக்கும் பலனளிக்கவில்லை.

பெரும்பாலான விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், தனியார் வங்கிகளிலும் வாங்கியுள்ள பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை. அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் கடன் பெறாதவர்கள் மற்றும் தவணை தவறாமல் (Prompt) செலுத்தியவர்கள் இத்திட்டத்தில் பலனடைய முடியாமல் போயுள்ளது.

தேர்தல் கால வாக்குறுதிகளில் குறிப்பிட்டபடி, நிபந்தனையின்றி அனைத்து விவசாயிகளின் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிக் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது விவசாய சங்கங்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

## விவசாயிகளை ஏமாற்றும் த.வெ.க. அரசு!

### காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்கள் கண்டனம்!

தஞ்சை, மே 28 - "த.வெ.க. அரசின் பயிர் கடன் தள்ளுபடி அறிவிப்பு விவசாயிகளை ஏமாற்றும் அறிவிப்பாக உள்ளது" என்று காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளது.

**காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் கே.வீ.இளங்கீரன் கூறியிருப்பதாவது:**

தேர்தல் அறிக்கையில் 5 ஏக்க ருக்குள் நிலம் வைத்திருப்ப வருக்கு 100 சதவீதமும், 5 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் கடனில் 50 சதவீதமும் கடன் தள்ளுபடி என்று தேர்தல் வாக்குறுதி கூறிவிட்டு, தற்போது விவசாயிகளை ஏமாற்றும் விதமாக இந்த அறிவிப்பு செய் யப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகள் இரண்டரை ஏக்கர் கடன் பெற்றிருந்தாலே ரூ.91,250 வருகிறது.

இதை முழுவதுமாக தள்ளுபடி செய்தால் மட்டுமே தான் விவசாயிகளுக்கு ஓரளவு கடனில் இருந்து மீள முடியும். எனவே, முதல்வர் விஜய், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் சாமி.நடராஜன் கூறியிருப்பதாவது:**

தமிழக அரசின் அறிவிப்பு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு முரணாக உள்ளது.

வேளாண் உற்பத்தி செலவு கள்கடுமையாக உயர்ந்துள்ளது. மத்திய அரசு கட்டுப்படியான ஆதார விலையை அறிவிக்காத நிலையில் பெரும் பகுதி விவசாயிகள் கடனாளிகளாக மாறியுள்ளனர். எனவே, 5 ஏக்கருக்குட்பட்ட விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு பயிர்க்கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் பெற்ற கூட்டுறவு பயிர் கடனில் 50 சதவீதத்தை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தமிழ்நாடு காவிரி விவசாயி கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.ஆர்.பாண்டியன் கூறியிருப்பதாவது:**

இந்த அறிவிப்புகள் கடன் சுமையில் இருக்கும் விவசாயி களை காப்பாற்ற உதவாது. மாநில அரசுகள் தனது நிதியில் இருந்து செயல்படுத்தும் கடன் தள்ளுபடி உள்ளிட்ட நலத்திட்டங் களுக்கு ரிசர்வ் வங்கியின் வழி காட்டுதல்கள் பொருந்தாது என்பதை முதல்வர் உணர வேண்டும்.

கடந்த காலங்களை பின்பற்றி கடன் வசூல் நடவடிக்கையை நிறுத்த வேண்டும். நடப்பாண்டுக்கான புதிய கடன் வழங்குவதற்கான நடவடிக்கையை தமிழக அரசுதீவிரப்படுத்தி, நிதி ஆதாரங்களைபெருக்கிக் கொண்டு கடன் தள்ளுபடி நடவடிக்கையை தொடர வேண்டும். தற்போதைய அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### விவசாயக் கடன் தள்ளுபடி

## ரூ.50,000 மட்டும்தான் என்பதை ஏற்க முடியாது!

### தமிழ்நாடு அரசுக்கு விவசாய அமைப்புகள் கண்டனம்!

சென்னை, மே 28 - தேர்தல் வாக்குறுதிப்படி விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் - விவசாயிகள் வலியுறுத்தினர்.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடியே, விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக்கடனை முதலமைச்சர் விஜய் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், 5 ஏக்கர் வரையிலான கடனை தள்ளுபடி செய்வேன் என்று அறிவித்துவிட்டு, தற்போது 50 ஆயிரம் மட்டும் என்று அறிவித்துள்ளதை ஏற்க முடியாது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

### தருமபுரி மேற்கு மாவட்டம் முழுவதும்

## முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



தருமபுரி, மே. 28- தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, வருகின்ற ஜீன் 3ம் நாள் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் நமக்கான புத்துணர்ச்சி நாளாக அமையட்டும். அன்றைய தினம் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை, வார்டு கழகங்கள் தோறும் இரு வண்ணக்கொடி ஏற்றி பட்டொளி வீசி பறந்திட செய்ய வேண்டும். நலிந்தோர்க்கும், ஏழை, எளியோர்க்கும் உதவிகள் செய்யும் நிகழ்ச்சிகளாக அமையட்டும். 75 ஆண்டுகளை கடந்து வெற்றி நடைபோடும் நமது திராவிட முன்னேற்ற கழகத்தின் வளர்ச்சிக்கு தன்னை அற்பணித்துக்கொண்ட கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கியும், தருமபுரி மேற்கு மாவட்டத்தைச் சார்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: 1. கழக நிர்வாகிகள் அனைவரும் தங்கள் பகுதியில் உள்ள கொடி கம்பங்களை புதுப்பித்து கழக கொடியினை ஏற்றவும்.

2. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அல்லது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தவும்.

3. இனிப்புகள், அன்னதானம் வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் நலிந்தோர் ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

4. கழக வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்து கொண்ட 70 வயதிற்கு மேற்பட்ட கழக மூத்த முன்னோடிகளை ஒன்றியம், பேரூர் வாரியாக பொற்கிழி வழங்க தேர்வு செய்து கொடுக்கவும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட எஸ்.எம்.டி. கவிதா கல்யாணசுந்தரம் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மேட்டுப்பாளையம் வடக்கு, தெற்கு நகரம், காரமடை வடக்கு, கிழக்கு ஒன்றியம், சிறுமுகை பேரூர் பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மத்திய , வடக்கு மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே.என்.நேரு அவர்கள் உரையாற்றினார். இதில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி வடக்கு மாவட்ட செயலாளர் தியாகராஜன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் பெரியசாமி, பழனியாண்டி, ஸ்டாலின் குமார், மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் துரைராஜ் டோல்கேட் சுப்பிரமணி, குடமுருட்டி சேகர், வழக்கறிஞர் பாஸ்கர், காஜாமலை விஜய் சித்ரா, பாரிவள்ளன், கருணை, ராஜா, கருணாநிதி, தர்மன், ராஜேந்திரன் உள்ளிட்ட ஒன்றிய செயலாளர், நகர செயலாளர்கள், பகுதி, பேரூர், கழ,க வட்டச் செயலாளர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை வடக்கு மாவட்ட கழக

## மாநகர - ஒன்றிய - பகுதி - பேரூர் - கழக செயலாளர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை!



தஞ்சாவூர், மே.28. தஞ்சாவூர் வடக்கு மாவட்டகழக, மாநகர–ஒன்றிய–பகுதி–பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் 30–05–2026 அன்று நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தஞ்சை வடக்கு மாவட்ட கழக, மாநகர–ஒன்றிய–பகுதி–பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம், 30–05–2026 சனிக்கிழமை காலை 10:00 மணியளவில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட கழக அலுவலக வளாகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள்: 1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா.

2. தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு குழு வருகை – மே 31, ஜீன் 1,2

3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர்,சாக்கோட்டை க. அன்பழகன்அறிக்கை வெளியிட்டுள்ளார்.



மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற இரா.ஜெயராமகிருஷ்ணன், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் உடுமலை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் உடுமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் தி. செழியன் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.